நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## M.C. No. 17/2024

## R.W. 1 –ன் வாக்குமூலம்

**(எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | தனபால் |
| தந்தை / கணவர் பெயர் | : | பெருமாள் |
| கிராமம் | : | மேட்டூர் |
| வட்டம் | : | சேலம் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **RW 1** |
| வயது | : | 54 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 15–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**மனுதாரர் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.54 AM

1. நான் எனது திருமண சமயத்தில் மேட்டூர் அனல் மின் நிலையத்தில் டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். திருமண சமயத்தில் எனது மனைவி டைலர் வேலை செய்து

வந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் என்னுடைய மாத சம்பளம் ரூபாய் 1500 என்றால் சரிதான். மேற்படி எனது சம்பளம் போதாததால் எனது மனைவி டைலர் வேலை செய்து மாதம் நான்காயிரம் ஐந்தாயிரம் எனக்கு செலவுக்கு கொடுத்து வந்தார் என்றால் சரியில்ல. சொந்த தேவைகளுக்காக மட்டும் தான் துணிகளை தைத்து வந்தார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எனது மனைவியுடைய வருமானத்தில் தான் அந்த சமயத்தில் குடும்பம் நடத்தினேன் என்றாலும் சரியில்ல.

2. அதன் பிறகு 1999 வருடம் தான் எனக்கு சம்பளம் 3000 ரூபாயாக உயர்த்தப்பட்டது என்றால் சரிதான். 2000 வருடம் தான் எனக்கு பணி நிரந்தரம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதுவரை எனது மனைவி தான் டைலர் வேலை செய்து எனக்கு உதவியாக இருந்து வந்தார் என்றால் சரியல்ல. திருமணத்தின் போது எனது மனைவியின் பெற்றோர் ஆறு பவுன் தங்க நகை போட்டார்கள் என்றால் சரிதான். திருமணத்தின் போது எனது தரப்பில் அரை பவுன் எனது மனைவிக்கு போட்டோம் என்றால் சரிதான்.

3. மூலக்காட்டில் எனக்கு வீடு உள்ளது என்றால் சரிதான். சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்பாக மேற்படி வீட்டுக்கு பாத்ரூம் மற்றும் பதில் சுவர் கட்ட வேண்டும் என்பதற்காக எனது மனைவி தன்னுடைய ஆறு பவுன் தங்க நகையை அடமானம் வைத்து ரூபாய் ஒரு லட்சத்து 20 ஆயிரம் எனக்கு பெற்றுக் கொடுத்தார் என்றால் சரியில்ல. எனது குழந்தைகளின் பள்ளி கல்வி செலவுக்காக அவ்வப்போது அடமானம் வைத்து திரும்ப பெறுவோம் ஆனால் கட்ட நகையை அடமானம் வைக்கவில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் என்னுடைய வற்புறுத்தலின் பெயரில் தான் மேற்படி தங்க நகையை எனது மனைவி அடமானம் வைத்து காம்பவுண்ட் சுவர் கட்ட கொடுத்தார் என்றால் சரியில்ல.

4. மேற்படி எனது மனைவி ரூபாய் 4 லட்சம் வங்கியில் இருந்து கடனாக வாங்கி வைத்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல வீட்டு செலவுக்காகவும் குழந்தைகளின் கல்விச் செலவுக்காகவும் வங்கியில் நகைகளை அடமானம் வைத்து நான்கு லட்சம் கடன் வாங்கி உள்ளோம். நான் எனது மனைவி நான்கு லட்சம் வங்கியில் இருந்து வாங்கி வைத்து கொண்டு

உள்ளதாக நான் எனது பிரமாணம் பத்திரத்தில் சொல்லவில்லை. மனுதாரர் தனது கைவசம் ரொக்கமாக ரூபாய் 5 லட்சம் வைத்துள்ளதாக நான் பிரமாண பத்திரத்தில் குறிப்பிடவில்லை.

5. மேற்படி நகை அடமானம் வைத்து நான்கு லட்சம் கடன் வாங்கியதற்காக இன்று வரை எனது மனைவிதான் வட்டி செலுத்துகிறார் என்றால் சரியல்ல. நான் தான் கட்டி வருகிறேன். வங்கியில் யாருடைய பெயரில் நகை அடமானம் வைக்கப்பட்டுள்ளதோ அவர்களால் தான் நகையை திரும்ப அடமானம் வைக்கவும் வட்டி கட்டவும் முடியும் என்றால் சரிதான். எனது மனைவி வருடா வருடம் நகைகளை அடமானத்தில் இருந்து மேட்டு மீண்டும் அடமானம் வைத்து அதிகபட்சமாக தங்க விலை உயர்வின் அடிப்படையில் வரும் தொகையை பெற்றுக் கொண்டு சென்று விடுகிறார். நான் மேற்படி நகை கடனுக்கு வட்டி செலுத்தி வருவதாக எனது பிரமாண பத்திரத்தில் சொல்லவில்லை.

6. திருமணத்திற்கு பிறகு நாங்கள் சந்தோஷமாகத்தான் வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். நான் சிங்கம்பேட்டையில் கடந்த 2016 ஆம் வருடம் வீடு கட்டினேன். எனது மனைவி டைலர் வேலை செய்து சீட்டு போட்டு சேர்த்து வைத்திருந்த ரூபாய் 7 லட்சத்தை மேற்படி வீடு கட்டுவதற்காக நான் வாங்கிக் கொண்டேன் என்றால் சரியல்ல நான் எச்டிஎப்சி வங்கியில் 14 லட்சம் கடன் வாங்கி வீடு கட்டி உள்ளேன். அந்த தொகை போதாதால் மீண்டும் கூடுதலாக மூன்று லட்சம் அதே கணக்கில் கடனாக பெற்றுள்ளேன். நான் வாங்கிய கடன் தொகைக்கு மேல் வீடு கட்ட செலவானதால்தான் எனது மனைவியிடம் பணம் வாங்கி வீடு கட்டி உள்ளேன் என்றால் சரியல்ல.

7. குழந்தைகளை வளர்ப்பது அப்பா அம்மா இருவரின் பொறுப்பு என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும் போது நான் தாக்கல் செய்த பிரமாணம் பத்திரத்தில் குழந்தைகளை எனது மனைவி சரியாக வளர்க்கவில்லை என்று பொய்யாக சொல்லி உள்ளார் என்றால் சரியில்லை. எனது மகனும் மகளும் மேஜரான பின்னிட்டு காதலித்து அவர்களது இஷ்டப்படி திருமணம் செய்து கொண்டதால் அவ்வாறு நான் குறிப்பிட்டுள்ளேன்.

8. மாதம் ரூபாய் 20000 நான் வீட்டு கடன் செலுத்தி வருவதற்கு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் நான் HDFC வங்கியில்

இருந்து கேட்டு வாங்கி தாக்கல் செய்கிறேன். 06.06.2023 தேதியில் எனது மனைவியை அடித்து வீட்டை விட்டு துரத்தி விட்டேன் என்றால் சரிதான் சண்டை வந்தது. கோபித்துக் கொண்டு அவரது அம்மா வீட்டுக்கு சென்று விட்டு திரும்ப வந்து விட்டார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அன்று சென்றவர் இன்றுவரை என்னுடன் சேர்ந்து வாழ நான் அழைத்துக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எனது மனைவியை நான் அடித்து வீட்டை விட்டு துரத்திய பிறகு அன்றிலிருந்து இன்று வரை மாதையன்குட்டையில் உள்ள எலிக்கரடு பகுதியில் உள்ள அவரது அண்ணன் வீட்டில் தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. தற்போது எனது மனைவி எனது மகள் வீட்டில் இருந்து வருகிறார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் இன்று வரை அவர் அங்கு தான் வசித்து வருகிறார் என்றாலும் சரி இல்லை.

9. நான் குடிபோதையில் எனது மனைவி வசிக்கும் அவரது அண்ணன் வீட்டுக்கு சென்று அவரை அங்கு தங்க வைக்கக் கூடாது என்று கத்தியை காட்டி பிரச்சனை செய்தேன் என்றாலும் கூட்டம் கூடியதும் நான் அங்கிருந்து வந்து விட்டேன் என்றாலும் சரியல்ல. எனது நங்கையா மருமகனை கூட்டிக்கொண்டு எனது மனைவியை திரும்ப அழைத்து வரும் எண்ணத்தில் நான் அங்கு சென்று இருந்தேன். அப்போது எனது மனைவியின் அண்ணன் என்னை அடிக்க வந்தார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் தான் அங்கு சென்று தகராறு செய்தேன் என்றாலும் சரியல்ல.

10. எனது மகன் சென்னையில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு குடிபழக்கமும் பெண்கள் சகவாசமும் அதிகமாக உள்ளது என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு ஏற்கனவே கர்ப்பப்பை அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இருப்பது எனக்கு தெரியும். பவானியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் மாதம் ஒருமுறை சிகிச்சை எடுத்து வருகிறார் என்றால் சரியில்லை. சிகிச்சை முடிந்த பிறகு நோய் சரியாகி விட்டது அதன் பிறகு மருத்துவமனைக்கு செல்வதில்லை. மேற்படி அறுவை சிகிச்சைக்கு பின்னிட்டு எனது மனைவி தான் செய்து வந்த டெய்லர் வேலையை விட்டு விட்டார் என்றால் சரியல்ல.

11. எனது மனைவிக்கு மேற்படி அறுவை சிகிச்சைக்கு பின்னிட்டு ஒரு நாள் வலி அதிகமானதால் தனது ஸ்கூட்டி இரு சக்கர வாகனத்தை அம்மாபேட்டையில்

உள்ள ஒரு சைக்கிள் ஸ்டாண்டில் நிறுத்திவிட்டு பவானி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்று விட்டார் என்றாலும் நான் ஸ்கூட்டியையும் எனது மனைவியும் காணவில்லை என சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. அன்று மாலையே எனது மனைவி வீட்டுக்கு வந்து விட்டார் என்றாலும் நான் தான் வீட்டுக்குள் விடாமல் இரண்டு நாட்களாக வெளியிலேயே நிறுத்தி வைத்திருந்தேன் என்றாலும் சரியில்ல எனது மனைவி வீட்டுக்கு வரவில்லை. இரண்டு நாள் எனது மனைவி வீட்டுக்கு வெளியே தான் இருந்தார் என்றாலும் பக்கத்து வீட்டுக்காரர்கள் தான் அவருக்கு உணவு கொடுத்து பாதுகாத்து வந்தார்கள் என்றாலும் சரியில்ல. பக்கத்து வீட்டில் தான் இருந்தார். வெளியில் இருக்கவில்லை. அந்த பக்கத்து வீட்டுக்காரர் பெயர் விஜயா சரவணன் என்றால் சரிதான்.

12. நான் எனது பிரமாண பத்திரத்தில் 8 6 2023-ம் தேதி எனது மனைவியை அடித்து துரத்தி விட்டதாக பொய்யாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளதாக சொல்லி உள்ளேன் என்றாலும் ஆனால் 6/6/2023 நான் எனது மனைவியை அடித்து வீட்டை விட்டு துரத்தி விட்டேன் என்றாலும் சரியல்ல. எனது மனைவிக்கு குடிப்பழக்கம் உள்ளது என்று வழக்கிற்காக நான் வீண் பழியை சுமத்தி இருந்தேன் என்றால் சரியல்ல. உண்மையில் எனக்கு தான் அதிக குடிப்பழக்கம் உள்ளது என்றால் சரி இல்லை. மனுதாரர் இன்றுவரை அவரது அண்ணன் வீட்டில் தான் குடியிருந்து வருகிறார் என்றாலும் நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் அவரது அண்ணன் எனது மனைவியை சேர்த்துக் கொள்ளவில்லை என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

13. கொளத்தூர் மூலக்காட்டில் எனக்கு 50 சென்ட் இடம் உள்ளது என்றால் சரிதான். அது எனக்கு தாத்தா வழி சொத்து. அந்த சொத்து எனது தாத்தா அம்மா அப்பா வழி வந்தது என்றால் சரிதான். அந்த சொத்தில் ஒரு வீடு உள்ளது. அதில் என் அம்மா குடியிருந்து வருகிறார். அந்த நிலத்தில் பயிர் எதுவும் செய்யவில்லை. மேற்படி நிலம் மூன்று தலைமுறை தாண்டி பரம்பரை நிலம் என்பதாலும் நான் அரசு வேலை செய்து வருவதாலும் அந்த நிலத்தை எனது மனைவி பெயருக்கு எழுதி வைத்து விட்டேன் என்றால் சரிதான். பரம்பரை சொத்து ஆகாது என்று சொன்னதால் நான் எழுதி வைத்துள்ளேன்.அது

மொத்தம் மூன்று ஏக்கர் நிலம் ஆகும் அதில் ஆறாக எனது சகோதரர்களுடன் பாகப்பிரிவினை செய்து கொண்டு எனக்கு வந்த 50 சென்ட் நிலத்தை எனது மனைவி பெயருக்கு கிரயமாக செய்து வைத்துள்ளேன். அந்த சொத்து எனது அம்மா பெயரில் இருந்து வாங்கியதாக கிரைய பத்திரம் எழுதப்பட்டது. அதற்கு ஏதோ ஒரு தொகை குறிப்பிட்டு கிரயம் பெற்றதாக அந்த பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னுடைய மற்ற சகோதரர்கள் எனது அம்மாவிடமிருந்து தான செட்டில்மெண்டாக நிலத்தை பெற்றுக் கொண்டனர் நான் மேற்படி இடம் மூன்று தலைமுறைகளாக இருப்பதால் எனது அம்மா பெயரிலிருந்து கிரயமாகப் பெற்றுக் கொண்டேன். ஆனால் நிறைய தொகை எதுவும் எனது அம்மாவுக்கு நான் கொடுக்கவில்லை. எவ்வளவு தொகை போட்டு கிரைய பத்திரம் எழுதினேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அந்த அசல் ஆவணம் என்வசம் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த நிலம் தொடர்பான ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

14. எனது மனைவி எனது மகனுக்கு வாங்கிய இருசக்கர வாகனத்திற்கு மாத தவணை செலுத்தி வருகிறேன் என்று எனது பிரமாண பத்திரத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான் அதற்கான ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வெளியில் தான் கைமாற்றாக கடன் வாங்கி வாகனம் வாங்கினோம். அதை நான் தற்பொழுது வரை செலுத்தி வருகிறேன். அதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை.

15. எனது மகளுக்காக கடன் வாங்கி கொடுத்தேன் என்று பிரமாண பத்திரத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான் அதற்கு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொசைட்டி மூலமாக கடன் வாங்கி கொடுத்தேன். மேற்படி வாகனத்துக்கு கடன் வாங்கிய தொகையும் மகளுக்கு கடன் வாங்கிய தொகையும் குறிப்பிட்ட நான் பிரமாணபத்திரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

16. எனது மனைவி சரியாக பராமரிக்காமல் பிரமாண பத்திரத்தில் பொய்யான காரணங்களை பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரி இல்லை. எனது மனைவி பராமரிக்க வேண்டிய சட்டப்பூர்வ கடமை எனக்கு உள்ளது என்றால் சரி இல்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.45PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**